**O.S.No. 11/2020**

**நாள்: 14.06.2023**

**வா.சா.1 , தேவராஜ் தகப்பனார்- மூக்காகவுண்டர்**
***1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில்***
வா.சா.1ன் குறுக்கு விசாரணை

1. நான் எந்த சர்வே நெம்பர் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் எனக்கு நினைவில்லை. இரண்டு சர்வே எண்கள் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

2. 3½ ஏக்கர் சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

4. ஒரு சர்வே எண் 3 ஏக்கரும் ஒரு சர்வே எண் ½ ஏக்கரும் உள்ளது.

5. நான் காசி மீதும் காசி தம்பி சர்க்கரை, வள்ளி ஆகியோர்கள் மீதும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன், அரசு மீதும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

6. நான் 6 சர்வே எண்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் நீண்ட காலமாக ஆகிவிட்டது எனக்கு நினைவில்லை.

7. வழக்கு போட்டு எவ்வளவு காலமானது என்றால் 4 வருடமாகியது.

8. எனக்கும் என் தந்தைக்கும் பாகம் சம்பந்தப்பட்ட சொத்துக்களில் என் பங்கை பொருத்து நான் வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

9. தாவா சொத்து வயல் வயலாக பிரித்து, பிரித்து உள்ளது.

இந்நீதிமன்றம் வாதியிடம் பொதுமக்கள் மற்றும் கோயில் விசேசத்திற்கு நல்ல விசயத்திற்கு பாதை இடம் விடுவதற்கு தயாராக இருப்பதாக வாதி அவர் கிரையம் பெற்ற நிலம் என்பதால் 11 சென்ட் இடத்தில் பாதை செல்ல இருப்பதால் 11 சென்ட் நிலத்திற்கு மாற்று ஏற்பாடாக வேறு இடம் கொடுத்தால் சமரசம் செய்ய வாய்ப்புள்ளது. 1ம் பீரதிவாதி மாற்று இடம்

தருவதற்கு தயாராக உள்ளேன் என கூறினார்.